செ.வெ.எண்:26 நாள்: 10.01.2017

**நவீன யுத்திகளுக்கு ஏற்ப நாமும் மாறிக்கொள்ள வேண்டும் என பணமில்லா பரிவர்த்தனை தொடர்பான பயிற்சியினை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் வேண்டுகோள்.**

கரூர் முன்னோடி வங்கி (இந்தியன் ஓவர்சீஸ் வங்கி) அலுவலகத்தில் இன்று (10.01.2017) துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களுக்கான பணமில்லா பரிவர்த்தனை தொடர்பான இரண்டு நாள் பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து தெரிவித்ததாவது :

உயர்மதிப்பு ரூபாய் நோட்டுக்கள் மதிப்பு இழந்ததால் பணமில்லா பரிவர்த்தனைகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அறிவித்ததையொட்டி மாநில அளவில் நடைபெற்ற பயிற்சியில் பங்குபெற்ற அலுவலர்களைக் கொண்டு மாவட்ட அளவில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களுக்கு பணமில்லா பரிவர்த்தனைகள் மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஏ.டி.எம்., செல்போன், வலைதளம் போன்றவைகள் மூலம் பண பரிமாற்றம் செய்வதுடன் ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கை இணைத்து சம்மந்தப்பட்டவரின் கைரேகை மூலம் பண பரிமாற்றம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நவீன பண பரிவர்த்தனை முறைகள் ஏழை, எளிய பாமர பொதுமக்கள் பயமின்றி புரிந்து கொண்டு செயல்படுத்துவதற்காக இப்பயிற்சி இரண்டு நாள் நடைபெறுகிறது.

தொடுதிரை செல்போன் பழக்கத்திற்கு வந்தபோது ஆரம்பத்தில் பயன்படுத்த சிறிதளவு சிரமமாக இருந்த நிலையிலும் நாம் பழகிக்கொண்டோம். அதேபோல், பணமில்லா பரிவர்த்தனைகளும் நாளடைவில் பழக்கத்திற்கு வந்துவிடும். இங்கு பயிற்சி பெற்ற அலுவலர்கள், வட்டார அளவில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், பணி மேற்பார்வையாளர்கள், ஒன்றிய பொறியாளர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட உள்ளன. பயிற்சியினை பெற்ற இவர்கள் மற்றவர்களுக்கு விபரமாக எடுத்துரைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இப்பயிற்சியின்போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆர்.கோமகன், கனரா வங்கி துணை பொது மேலாளர் திரு.எம்.எஸ்.ஆவுடையப்பன், பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் திரு.கே.ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**